# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## August 17, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஈரான் போர் காரணமாக ஏற்பட்ட பாதிப்பைத் தொடர்ந்து, தற்போது முதல் முறையாக பொது மற்றும் தனியார் சுத்திகரிப்பு நிலையங்கள், எண்ணெய்-எரிவாயு உற்பத்தி நிறுவனங்களுக்கு எல்பிஜி (சமையல் எரிவாயு) உற்பத்தி இலக்கை மத்திய அரசு நிர்ணயித்துள்ளது.

   i. இதுதொடர்பாக மத்திய - பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சம் அண்மையில் வெளியிட்ட உத்தரவில், 21 எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், எண்ணெய்-எரிவாயு உற்பத்தி நிறுவனங்கள் அதிகபட்சமாக உற்பத்தி செய்ய வேண்டிய எல்பிஜி அளவு குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, அந்த நிலையங்கள் மற்றும் நிறுவனங்கள் ஒட்டுமொத்தமாக ஒருநாளைக்கு 63,810 டன் எல்பிஜியை உற்பத்தி செய்யலாம்.

   ii. ரிலையன்ஸுக்கு அதிகபட்ச இலக்கு:

   - தற்போதைய உத்தரவின்படி, உள்நாட்டில் உற்பத்தி பொருள்களை விற்பனை செய்யும் குஜராத் மாநிலம் ஜாம்நகரில் உள்ள ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் சுத்திகரிப்பு நிலையம், ஒருநாளைக்கு 18,000 டன் வரை எல்பிஜி உற்பத்தி செய்ய வேண்டும்.
   - குஜராத் மாநிலம் வாடினாரில் உள்ள நயாரா எனர்ஜி நிறுவனம் ஒருநாளைக்கு 4,480 டன் எல்பிஜி உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஓஎன்ஜிசி, கெயில் உள்ளிட்ட நிறுவனங்கள் ஒருநாளைக்கு 6,460 டன் எல்பிஜி உற்பத்தி செய்ய வேண்டும்.
   - பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களுக்குச் சொந்தமான மற்றும் அவற்றால் இயக்கப்படும் 18 சுத்திகரிப்பு நிலையங்கள், மொத்தமாக ஒருநாளைக்கு 31,470 டன் எல்பிஜி உற்பத்தி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

   iii. தட்டுப்பாடு ஏற்படும்போது இலக்கு அமல்:

   - எல்பிஜி விநியோகத்தில் தட்டுப்பாடு அல்லது இடர்ப்பாடு ஏற்படும் போதெல்லாம், இந்த உற்பத்தி இலக்கு அமல்படுத்தப்படும். இந்த உற்பத்தி அட்டவணையை ஒவ்வொரு ஆண்டு ஜனவரி 1, ஜூலை 1 ஆகிய தேதிகளில் மத்திய அரசு புதுப்பிக்கும் என்று அந்த உத்தரவில்

தெரிவிக்கப்பட்டுள்ளது.

- தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கு என்பது கடந்த நிதியாண்டில் இந்தியாவின் எல்பிஜி உற்பத்தியைவிட இரண்டு மடங்குக்கு அதிகமாகவும், நாட்டின் ஒருநாள் எல்பிஜி நுகர்வில் சுமார் 70 சதவீதமாகவும் உள்ளது.
- கடந்த 2025-26-ஆம் நிதியாண்டில் 3.32 கோடி டன் எல்பிஜியை இந்தியா பயன்படுத்தியது. 64 சதவீதத்துக்கும் அதிகமான எல்பிஜி வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஈரான் போர் காரணமாக ஹோர்முஸ் நீரிணையை அந்நாடு மூடியதால், அவ்வழியாக சரக்குக் கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இது இந்தியாவுக்கு எல்பிஜி கிடைப்பதில் பாதிப்பை ஏற்படுத்தியது.
- இதைக் கருத்தில் கொண்டு, உள்நாட்டு விநியோக முறையை மேலும் வலுப்படுத்தும் நோக்கில், தற்போது முதல்முறையாக பொது மற்றும் தனியார் சுத்திகரிப்பு நிலையங்கள், எண்ணெய்- எரிவாயு உற்பத்தி நிறுவனங்களுக்கு எல்பிஜி உற்பத்தி இலக்கை மத்திய அரசு நிர்ணயித்துள்ளது.

2. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட்டில் வங்கதேசம் 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலமாக, ஆஸ்திரேலிய மண்ணில் வங்கதேசம் தனது முதல் வெற்றியைப் பதிவு செய்து வரலாறு படைத்திருக்கிறது.

    i. கிரிக்கெட்டில் 'சேனா' நாடுகளுக்கு எதிராக வங்கதேசம் பெற்ற 2-ஆவது வெற்றி இதுவாகும். முதல் வெற்றியை 2022-இல் நியூஸிலாந்துக்கு எதிராகப் பதிவு செய்தது. தென்னாப்பிரிக்கா, இங்கிலாந்து, நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா ஆகியவை 'சேனா' நாடுகள் எனப்படுகின்றன.

3. பிரதமரின் கதி சக்தி திட்டத்தின்கீழ் (உத்வேகத் திட்டம்) ரூ.18.66 லட்சம் கோடி மதிப்பிலான 396 உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்க பரிந்துரைக்கப்பட்டிருப்பதாக மத்திய அரசின் தரவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

    i. கடந்த 2021, அக்டோபர் 13-ஆம் தேதி தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட வலையமைப்பு திட்டக் குழு (என்பிஜி) சாலை மற்றும்

ரயில்வே என பல்வேறு துறைகளுக்கான உள்கட்டமைப்புத் திட்டங்களை அமைச்சகங்களுக்கு பரிந்துரைத்துள்ளது.

ii. இதுகுறித்து மத்திய அரசின் தரவுகளில் கூறப்பட்டிருப்பதாவது:

- ரூ.18.66 லட்சம் கோடி மதிப்பில் 396 உள்கட்டமைப்புத் திட்டங்களை என்பிஜி மதிப்பீடு செய்தது. இதில் 256 திட்டங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சகங்களுக்கு ஒதுக்கப்பட்டன. அவற்றுள் 198 திட்டங்கள் அமலாக்க நிலையில் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. தளவாடங்கள் செலவை குறைப்பதை நோக்கமாகக் கொண்ட இத்திட்டத்தில் ரூ.500 கோடிக்கு மேலான முதலீடுகளை என்பிஜி மூலமே மேற்கொள்ள முடியும்.

4. வங்கதேச பிரதமர் தாரிக் ரஹ்மான் தில்லிக்கு வருவதற்கு உகந்த சூழலை இந்தியா வாக்க வேண்டும் என்று வங்கதேசம் தெரிவித்தது.

i. தில்லியில் செப்.12, 13 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ள பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்பதற்காக தாரிக் ரஹ்மான் வருவது தொடர்பாக தொடர்ந்து குழப்பம் நீடித்து வரும் நிலையில், வங்கதேசம் இக்கருத்து தெரிவித்துள்ளது.

5. காவிரி நீர் விவகாரம் மற்றும் முன்மொழியப்பட்ட மேகதாது திட்டம் ஏன் தமிழ்நாட்டு விவசாயிகளிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்துகிறது என்பது குறித்த பகுப்பாய்வு.

(i) மேகதாது திட்டத்தின் பின்னணி

- தமிழ்நாடு எல்லைக்கு மிக அருகிலும், ஒகேனக்கல்லுக்கு மேலேயும் அமைந்துள்ள மேகதாதுவில் ஒரு அணையை கட்ட கர்நாடகா திட்டமிட்டுள்ளது.
- பெங்களூரு நகரத்திற்கு குடிநீர் வழங்குவதற்கு இத்திட்டம் அவசியமானது என்று கர்நாடக அரசு கூறுகிறது.
- இது முற்றிலும் பொய்யான வாதம் என்றும், ஆற்றின் நீரோட்டத்தின் மீது கூடுதல் கட்டுப்பாட்டைப் பெறுவதற்கான ஒரு உத்தி என்றும் தமிழ்நாடு கருதுகிறது.

(ii) புவியியல் மற்றும் விவசாயம் சார்ந்த வேறுபாடுகள்

- தமிழ்நாட்டின் நிலப்பரப்பில் 34% காவிரிப் படுகைக்குள் அமைந்துள்ளது; ஆனால் கர்நாடகாவின் நிலப்பரப்பில் 17% மட்டுமே இப்படுகையில் உள்ளது.
- தமிழ்நாட்டில், ஆற்று நீர் பாசனத்திற்கு உட்பட்ட நிலங்களில் 60% காவிரி

நீரையே முழுமையாகச் சார்ந்துள்ளது; மேலும் மாநிலத்தின் உணவு தானிய உற்பத்திக்கு இதுவே முதன்மையான ஆதாரமாக விளங்குகிறது.

- பாசனப் போக்குகள் (கடந்த 60 ஆண்டுகளில்):
- கர்நாடகா: தனது கால்வாய் பாசனப் பரப்பை 2.8 லட்சம் ஹெக்டேரிலிருந்து (1960–61) 9.62 லட்சம் ஹெக்டேராக (2022–23) அதிகரித்துள்ளது.
- தமிழ்நாடு: அதே காலகட்டத்தில், அதன் கால்வாய் பாசனப் பரப்பு 8.95 லட்சம் ஹெக்டேரிலிருந்து 6.45 லட்சம் ஹெக்டேராகக் குறைந்துள்ளது.
- தமிழ்நாட்டில் நிகர சாகுபடிப் பரப்பு 1960-களில் 60 லட்சம் ஹெக்டேராக இருந்த நிலையில், 2010-ஆம் ஆண்டிற்குள் அது 47 லட்சம் ஹெக்டேராகக் குறைந்துள்ளது.

(iii) சட்டக் கட்டமைப்பு மற்றும் நீர் ஒதுக்கீடு

- உச்ச நீதிமன்றத் தீர்ப்பு (2018): இயல்பான மழைப்பொழிவு உள்ள ஆண்டில், கர்நாடகா தமிழ்நாட்டிற்கு 177.25 டி.எம்.சி (TMC) நீரைத் திறந்துவிட வேண்டும்.
- இந்த ஒதுக்கீட்டில் ஜூன் மாதத்தில் 10 டி.எம்.சி, ஜூலையில் 34 டி.எம்.சி, ஆகஸ்டில் 50 டி.எம்.சி மற்றும் செப்டம்பரில் 40 டி.எம்.சி ஆகியவை அடங்கும்.
- குறைந்த மழைப்பொழிவு உள்ள ஆண்டுகளில் ஏற்படும் நீர் பற்றாக்குறையைப் பகிர்ந்துகொள்வது தொடர்பான கணக்கீடுகளை மேற்கொள்ளும் பொறுப்பு காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திடம் (CWMA) உள்ளது; இதற்கான கணக்கீடுகள் பொதுவாக செப்டம்பர்/அக்டோபர் மாதங்களில் உறுதிப்படுத்தப்படுகின்றன.

(iv) விதிமுறைகளை மீறும் வரலாற்றுப் போக்கு

- கர்நாடகா தனது அணைகள் காலியாக உள்ளன அல்லது குடிநீருக்கு மட்டுமே போதுமான நீர் உள்ளது என்று அடிக்கடி கூறுகிறது; இருப்பினும், கனமழை பெய்யும்போது, திடீரென பெருமளவிலான நீரை (எ.கா., 25,000 கனஅடி) ஆற்றில் திறந்துவிடுகிறது.
- கடந்த 30 ஆண்டுகளில் (1994–2024), 123.14 டிஎம்சி (TMC) நீரைத் திறந்துவிட வேண்டிய கட்டாயம் இருந்தபோதிலும், ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான முக்கியமான காலகட்டத்தில் 11 வெவ்வேறு ஆண்டுகளில் கர்நாடகா 100 டிஎம்சி-க்கும் குறைவான நீரையே திறந்துவிட்டுள்ளது.
- 2023–24 ஆம் ஆண்டில், இந்த நான்கு முக்கியமான மாதங்களில் கர்நாடகா 78.8 டிஎம்சி நீரை மட்டுமே திறந்துவிட்டது.
- நீர்மட்டம் சற்று குறைவாக இருக்கும்போதெல்லாம், காவிரி நீர் மேலாண்மை

ஆணையத்தின் (CWMA) பரிந்துரைகளையும் உச்ச நீதிமன்ற உத்தரவுகளையும் கர்நாடகா தொடர்ந்து புறக்கணிக்கிறது.

(v) தமிழக விவசாயத்தின் மீதான தாக்கம்

- ஜூன் முதல் செப்டம்பர் வரையிலான நான்கு மாதங்களே குறுவை மற்றும் சம்பா பயிர்களின் வெற்றியைத் தீர்மானிக்கும் முக்கியக் காரணியாக உள்ளன.
- சீரற்ற நீர் திறப்பு காரணமாக, சில பகுதிகளில் குறுவை சாகுபடி பரப்பு 25,000 ஹெக்டேரிலிருந்து 4,295 ஹெக்டேருக்கும் குறைவாகக் குறைந்துள்ளது.
- கர்நாடகா தனது சொந்த நீர் சேமிப்பு மாதிரிகளின் அடிப்படையில் நீர்வரத்தைக் கட்டுப்படுத்தினால், தமிழ்நாட்டில் சுமார் 12.5 லட்சம் ஏக்கர் பாசன நிலம் தரிசு நிலமாக மாறக்கூடும்.

(vi) மேகதாது விவகாரத்தில் விவசாயிகள் ஏன் அச்சமடைகிறார்கள்?

- மேகதாதுவில் அணை கட்டப்பட்டால், தற்போது மேட்டூர் அணையை வந்தடையும் கசிவு நீர் மற்றும் உபரி நீர் ஆகிய அனைத்தையும் கர்நாடகா தடுத்து நிறுத்திவிடும் என்றும், இதனால் காவிரி டெல்டா பகுதி நிரந்தரமாகப் பாலைவனமாகிவிடும் என்றும் விவசாயிகள் அஞ்சுகின்றனர்.
- கர்நாடகாவின் "பிடிவாதமான போக்கு" மற்றும் சட்டப்பூர்வ உத்தரவுகளைப் புறக்கணிக்கும் வரலாறு ஆகியவை, எந்தவொரு புதிய நீர் சேமிப்புத் திட்டத்தையும் தமிழக விவசாயத்தின் வாழ்வாதாரத்திற்கு நேரடி அச்சுறுத்தலாக மாற்றுகின்றன.

(vii) பரிந்துரைக்கப்படும் தீர்வுகள்

- அஞ்சல் மற்றும் ரயில்வே துறைகளைப் போலவே, மாநிலங்களுக்கு இடையிலான ஆறுகளில் உள்ள அணைகளின் பராமரிப்பு மற்றும் செயல்பாட்டை மத்திய அரசு முழுமையாகத் தன் கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்ள வேண்டும்.
- மாநில அரசு வெறும் சட்டப் போராட்டங்கள் மற்றும் போராட்டங்களைத் தாண்டிச் செயல்பட வேண்டும். கடலில் கலந்து வீணாகும் வெள்ளநீரைச் சேமிக்க, தடுப்பணைகளைக் கட்டுவதற்கும் தனது சொந்த நீர் சேமிப்பு அமைப்புகளை நவீனமயமாக்குவதற்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும்.